சின்னச் சின்னதாய்...

அமராவதி சர்க்கரை ஆலையில் இன்று கொதிகலன் இளஞ்சூடேற்றும் நிகழ்வு

●உடுமலை
அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பராமரிப்புப் பணிகள் முடிவுற்ற நிலையில் அரவைக்கான கொதிகலன் இளஞ்சூடேற்றும் நிகழ்வு இன்று நடைபெற உள்ளது.

உடுமலை அடுத்த கிருஷ்ணாபுரத்தில் இயங்கி வரும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடப்பாண்டுக்கான அரவைப் பணிகள் வரும் 21–ம் தேதி தொடங்க உள்ளது. இதையொட்டி ரூ.10 கோடி செலவில் இயந்திரங்கள் புனரமைக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கரும்பு அரவையில் முக்கிய பங்காற்றும் கொதிகலனுக்கான இளஞ்சூடேற்றும் நிகழ்வு இன்று (ஏப்.10) காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது. காலை 11 மணிக்கு ஆலையின் சமுதாய நலக்கூடத்தில், கரும்பு பயிரிடுவோர் சங்கம், நிர்வாக அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. இத்தகவலை கரும்பு பயிரிடுவோர் சங்கம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் சி.சண்முகவேலு தெரிவித்துள்ளார்.

தொடர் திருட்டு வழக்கில் 2 பேர் கைது

●உடுமலை
தாராபுரத்தில் உள்ள அசோக்நகர், ஜோதிநகர், கணபதி பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பூட்டியிருந்த வீடுகளை குறிவைத்து, திருட்டு சம்பவங்கள் நிகழ்ந்தன. இதுதொடர்பாக தனிப்படை அமைத்து மர்ம நபர்களை போலீஸார் தேடி வந்தனர். தாராபுரம் ஐ.டி.ஐ. கார்னர் பகுதியில் போலீஸார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, அவ்வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த இருவரை பிடித்து விசாரித்தனர். இருவரும் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்தனர். சந்தேகம் அடைந்த போலீஸார், தாராபுரம் காவல் நிலையம் அழைத்துச்சென்று விசாரித்தனர்.

விசாரணையில் அவர்கள், குன்னத்தூரை சேர்ந்த இம்ரான், தருமபுரியை சேர்ந்த கவியரசன் என்பது தெரியவந்தது. திருப்பூரில் உள்ள பனியன் நிறுவனத்தில் பணியாற்றி வருவதும், இவர்களுடன் மேலும் 2 பேர் சேர்ந்து பல்வேறு பகுதிகளில் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததும், தாராபுரத்தில் 3 வீடுகளில் இவர்கள் கைவரிசையை காட்டியிருப்பதும் தெரியவந்தது. இருவரையும் கைது செய்த போலீஸார், 10 பவுன் தங்க நகைகள், ரூ.70 ஆயிரம், இரு சக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். தாராபுரம் குற்றவியல் நீதிமன்றத்தில் அஜர்படுத்திய பின் இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

கோவையில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் பாடிய சங்கர் மகாதேவன். உடன், தாய் மண்ணே வீடியோ பாடலை எழுதி தயாரித்த ரவி முருகையா, மௌனராகம் இயக்குநர் முரளி, அருண் ஈவென்ட்ஸ் இயக்குநர் அருண் உள்ளிட்டோர்.

கோவையில் சங்கர் மகாதேவன் இசை நிகழ்ச்சி ஏராளமான ரசிகர்கள் நேரில் ரசித்தனர்

●கோவை
கோவையில் நடைபெற்ற பிரபல பின்னணி பாடகர் சங்கர் மகாதேவனின் இசை நிகழ்ச்சியை ஆயிரக்கணக்கான ரசிகர்கள் நேரில் கேட்டு ரசித்தனர்.

ஆதித்யா கல்வி குழுமம், மௌன ராகம் முரளி, அருண் ஈவென்ட்ஸ், டாக்டர் ஏபிஜே அப்துல்கலாம் பவுண்டேஷன் நிர்வாக அறங்காவலர் டாக்டர் எஸ்.ரூபன் இணைந்து நடத்திய, ரவி முருகையாவின் 'தாய் மண்ணே' வழங்கும், பிரபல பின்னணி பாடகர் சங்கர் மகாதேவனின் இசை நிகழ்ச்சி, கோவை ஆதித்யா தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சங்கர் மகாதேவன், அவர் பாடிய திரைப்பட பாடல்கள் மற்றும் தேச பக்தி பாடலான தாய் மண்ணே உள்ளிட்ட பாடல்களை பாடினார். 4 மணி நேரம் இடைவிடாது நடைபெற்ற இசை நிகழ்ச்சியை சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நேரில் கேட்டு ரசித்தனர். 'தாய் மண்ணே' பாடல் குறித்து வாஸன் எஸ்டேட்ஸ் நிறுவனர், உரிமையாளர் ரவி முருகையா கூறும்போது, "கார்கில் போரில் உயிர் நீத்த வீரர்களின் தியாகத்தை நினைவுகூர்ந்து, கடந்த 2000–ம் ஆண்டில் 'தாய்மண்ணே' என்ற பாடலை நான் எழுதினேன். நாட்டின் 75–வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தமிழ் பாடலை தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசனும், இந்தி பாடலை முன்னாள் கிரிக்கெட் வீரர் கவுதம் கம்பீரும் வெளியிட்டனர். இரண்டு பாடல்களின் வீடியோக்களை சேர்த்து யுடியூப்பில் மொத்தம் சுமார் 40 லட்சம் பேர் பார்த்துள்ளனர். வரும் நாட்களில் தெலுங்கு, கன்னடம் ஆகிய 2 மொழிகளிலும் ஒலிப்பதிவு செய்யப்பட உள்ளது" என்றார்.

இந்த நிகழ்வுக்கு 'இந்து தமிழ் திசை' நாளிதழ் மீடியா பார்ட்னராக செயல்பட்டது. கற்பகம் ஜூவல்லர்ஸ், சுப்ரீம் மொபைல்ஸ், குரோபக்ஸ், வின்னர் இந்தியா சிட்டி டெவலப்பர்ஸ், உயிர் ஆர்கானிக் பார்மர்ஸ் மார்க்கெட், ஸ்ரீ கோகுலம் சிட் அண்ட் பைனான்ஸ் நிறுவனம், டோக்கியோ தமிழ்ச் சங்கம், யெஸ் ஈவன்ட்ஸ், ஸ்ரூசன் மைண்ட் மேட்டர்ஸ் ஆகியவை இணைந்து வழங்கின.

பழநி கோயிலுக்கு வந்த கோவை பக்தர் உயிரிழப்பு

●பழநி
கோவை அருகே செட்டிபாளையம் பகுதியைச் சேர்ந்த தனியார் நிறுவன ஊழியர் ஜெயச்சந்திரன் (44). இவர் நேற்று தனது குடும்பத்துடன் பழநிக்கு சுவாமி தரிசனம் செய்ய வந்தார். பழநி மலைக்கோயிலுக்கு படிப்பாதை வழியாகச் செல்லும்போது அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது. இதில் மயங்கி விழுந்த அவரை உறவினர்கள், கோயில் பணியாளர்கள் ரோப் கார் மூலம் பழநி அடிவாரத்துக்கு கொண்டு சென்றனர்.

அங்கிருந்து கோயில் ஆம்புலன்ஸில் பழநி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

கோடை சீசன் களைகட்ட தொடங்கியுள்ளதால்

உதகைக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு

●உதகை
கோடை சீசன் களை கட்ட தொடங்கியுள்ளதால், உதகைக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

சமவெளிப் பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் தொடங்கியுள்ள நிலையில், சில மாவட்டங்களில் 100 டிகிரி செல்சியஸையும் தாண்டி விட்டது. இதனால், நீலகிரி மாவட்டத்துக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து வருகிறது. வார விடுமுறை நாளான நேற்று முன் தினமும், நேற்றும் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து உதகையில் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் குவிந்தனர். தாவரவியல் பூங்காவில் நேற்று வழக்கத்தைவிட சுற்றுலா பயணிகள் வருகை அதிகமாக இருந்தது. நுழைவுவாயிலில் டிக்கெட் பெற கூட்டம் அலைமோதியது. இதே போல, ரோஜா பூங்காவில் பல வண்ணங்களில் பூத்துக் குலுங்கிய மலர்களை கண்டு ரசித்தனர்.

உதகை தாவரவியல் பூங்காவில் திரண்டிருந்த சுற்றுலா பயணிகள் கூட்டம். படம்: ஆர்.டி.சிவசங்கர்

உதகை படகு இல்லத்தில் மிதி படகு, துடுப்பு படகு, மோட்டார் படகுகளில் சவாரி செய்து மகிழ்ந்தனர். குதிரை சவாரி செய்தும் உற்சாகமடைந்தனர். பைன் பாரஸ்ட், ஷூட்டிங்மட்டம், பைக்காரா படகு இல்லம், தேயிலை பூங்கா உள்ளிட்ட சுற்றுலா தலங்களிலும் கூட்டம் அதிகமாக இருந்தது.

இதேபோல, குன்னூர் உட்பட பல்வேறு இடங்களிலும் சுற்றுலா பயணிகள் வருகை அதிக அளவில் இருந்தது. உதகை கமர்சியல் சாலை, சேரிங்கிராஸ், தாவரவியல் பூங்கா சாலை, மாவட்ட ஆட்சியர் அலுவலக சாலையில் வாகனங்கள் நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்றன.

சாலையோரத்தில் வாகனங்களை நிறுத்தியதால், போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் காலை மற்றும் மாலை நேரங்களில் குன்னூரில் இருந்து உதகைக்கு வரும் வாகனங்கள், லவ்டேல் சந்திப்பில் காந்தி நகர் வழியாக திருப்பிவிடப்படுகின்றன.

கோடை சீசன் தொடங்க உள்ள நிலையில், சுற்றுலா பயணிகள் கூட்டத்தால் உதகை களைகட்டியுள்ளது.

எமரால்டில் புலி தாக்கி பசு மாடு உயிரிழப்பு

●மஞ்சூர்
எமரால்டு பகுதியில் புலி தாக்கி பசு மாடு உயிரிழந்த சம்பவம், பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தீவன தட்டுப்பாடு, வனப்பகுதியில் ஆக்கிரமிப்பு, வழித்தடங்கள் அழிப்பு என்பன உட்பட பல்வேறு காரணங்களால், நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வனப்பகுதியில் இருந்து விலங்குகள் வெளியேறி ஊருக்குள் புகுந்து அட்டகாசம் செய்து வருகின்றன. குறிப்பாக குன்னூர், கோத்தகிரி, மஞ்சூர் பகுதிகளில் கரடி, சிறுத்தை நடமாட்டமும், கூடலூர் பகுதியில் காட்டு யானை நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், எமரால்டு பகுதியிலுள்ள மின்வாரிய அலுவலகம் அருகே புட்டன் என்பவரின் வீட்டின் அருகே ராஜன் கார்த்தி என்பவருக்கு சொந்தமான பசு மாட்டைபுலிதாக்கிகொன்றுள்ளது. இதனால், அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கூறும்போது, "வனப்பகுதியில் வேட்டையாடப்பட்ட பசு மாட்டின் உடல் கிடப்பதை பார்த்து, தொழிலாளர்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். ஏனெனில், இந்த புலி மீண்டும் கால்நடைகளைதேடி இப்பகுதிக்கு வரலாம். அப்போது மனிதர்களை தாக்கும் அபாயம் உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், இந்த புலி 23 கால்நடைகளை வேட்டையாடியுள்ளது. எனவே, கூண்டு வைத்து புலியை பிடிக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

உடுமலை அருகே 6 பவுன் நகை திருட்டு

●உடுமலை
உடுமலை அருகே பூலாங்கிணறு பெருமாள் கோயில் வீதியை சேர்ந்தவர் பஞ்சலிங்கம் (58). இவர், அங்குள்ள தனியார் பஞ்சாலையில் தொழிலாளியாக வேலை செய்து வருகிறார்.

சம்பவத்தன்று இவரது மனைவி, கேரள மாநிலம் பாலக்காட்டில் உள்ள தனது மகளை பார்ப்பதற்காக சென்றார். இரவுப் பணி முடிந்து வீடு திரும்பிய பஞ்சலிங்கம், வீட்டின் முன்பக்க கதவின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தார். உள்ளே சென்று பார்த்தபோது பீரோவில் இருந்த 6 பவுன் தங்க நகைகள் திருடு போனது தெரியவந்தது. இது குறித்து உடுமலை போலீஸார் வழக்கு பதிந்து மர்மநபர்களை தேடி வருகின்றனர்.

உடுமலையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கம் சார்பில் நடைபெற்ற இலக்கிய அமர்வில் பங்கேற்றோர்.

உடுமலையில் தமுஎகச சார்பில் கலை இரவு நடத்த முடிவு

●உடுமலை
உடுமலையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கம் சார்பில் இலக்கிய அமர்வு நடைபெற்றது. சங்கத்தின் கிளை தலைவர் சுதா சுப்பிரமணியம் தலைமை வகித்தார். செயலாளர் துரையரசன் வரவேற்றார். மாவட்ட இணைச் செயலாளர்கள் ராஜா, இளையபாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்வில் புதிய படைப்புகள் அரங்கேற்றமும், அதன் மீதான விமர்சனமும் நடைபெற்றது. பின்னர், இலக்கிய மாத இதழான செம்மலர் சார்பில் வாசகர் வட்டம் ஏற்படுத்துவது, உடுமலையில் முற்போக்கு சிந்தனை குறித்த விழிப்புணர்வுக்காக நாட்டுப்புற கலைஞர்களின் தப்பாட்டம், கும்மியாட்டம், தேவராட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், நாடகம், உரைவீச்சு, நூல் வெளியீடு, கலை பேரணி உள்ளிட்ட நிகழ்வுகள் கொண்ட கலை இரவு நடத்துவது என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மடத்துக்குளம் கிளை சார்பில் வானவில் என்ற பெயரில் நடத்தி வரும் 'வாட்ஸ்அப்' குழுவுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

திருப்பூர், கோவை, நீலகிரி மாவட்ட கிறிஸ்தவ தேவாலயங்களில்

ஈஸ்டர் பண்டிகை சிறப்பு பிரார்த்தனை

●கோவை/திருப்பூர்/உதகை
ஈஸ்டர் பண்டிகை முன்னிட்டு கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களில் உள்ள தேவாலயங்களில் சிறப்பு வழிபாடு நடந்தது.

கோவையில் காட்டூர் அரசர் ஆலயம், உப்பிலிபாளையம் இம்மானுவேல் ஆலயம், டவுன்ஹால் புனித மைக்கேல் ஆலயம், திருச்சி சாலை கிறிஸ்துநாதர் ஆலயம், புலியகுளம் அந்தோணியார் ஆலயம், காந்திபுரம் சிஎஸ்ஐ கிறிஸ்துநாதர் ஆலயங்களில் சிறப்பு வழிபாடு நடந்தது.

இதேபோல, திருப்பூர் குமரன் சாலையில் உள்ள கேத்தரினா தேவாலயம் உட்பட மாவட்டத்தில் உள்ள அனைத்து கிறிஸ்தவ ஆலயங்களிலும் ஈஸ்டர் பண்டிகை சிறப்பு பிரார்த்தனை நடந்தது.

உதகை தூய இருதய ஆண்டவர் ஆலயத்தில் ஆயர் அமல்ராஜ் தலைமையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் ஈஸ்டர் தின பிரார்த்தனை மற்றும் கூட்டு திருப்பலியும், மேரிஸ்ஹில் பகுதியிலுள்ள புனித மரியன்னை ஆலயத்தில், பங்குத் தந்தை வின்சென்ட் தலைமையில் சிறப்பு பிரார்த்தனை மற்றும் கூட்டு திருப்பலியும் நடைபெற்றன.

உதகை தூய திரித்துவ ஆலயத்தில் காலை சிறப்பு ஆராதனையும், காந்தல் குருசடி ஆலயத்தில் பிரார்த்தனையும் நடைபெற்றது.

ஈஸ்டர் பண்டிகையையொட்டி கோவையில் உள்ள சிஎஸ்ஐ கிறிஸ்து நாதர் ஆலயத்தில் சிறப்பு பிரார்த்தனையில் பங்கேற்றோர். படம்: ஜெ.மனோகரன்

திருப்பூர் குமரன் சாலையில் உள்ள கேத்தரினா தேவாலயத்தில் ஈஸ்டர் பண்டிகை சிறப்புப் பிரார்த்தனையில் ஈடுபட்ட கிறிஸ்தவர்கள்.

இதைத்தொடர்ந்து, எல்க்ஹில் புனித ஜாட்ஸ் ஆலயம், ஃபிங்கர் போஸ்ட் புனித தெரசா அன்னை ஆலயம், கேத்தி இ.எஸ்.ஐ.ஆர். ஆலயம், உதகை சி.எஸ்.ஐ., வெஸ்லி ஆலயம் உட்பட மாவட்டம் முழுவதும் பல்வேறு தேவாலயங்களில் ஈஸ்டர் பிரார்த்தனை நடந்தது.

தேச விரோத கும்பல் மீது நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு இந்து முன்னணி வலியுறுத்தல்

●திருப்பூர்
தமிழகத்தில் தேசவிரோதமாகவும், நாட்டின் வளர்ச்சிக்கு எதிராகவும் செயல்படும் கும்பல்களின் கொட்டத்தை தமிழக அரசு ஒடுக்க வேண்டுமென இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சமீபத்தில் குடிமைப் பணிக்கு தயாராகும் மாணவர்களிடையே தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பேசும்போது, தமிழகத்தின் வளர்ச்சி திட்டங்களுக்கு எதிராக வெளிநாட்டின் உதவியோடு போராட்டங்கள் நடைபெற்றதாக குறிப்பிட்டார்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் காப்பர் ஆலை, கூடங்குளம் அணு மின் நிலையம், சேலம் 8 வழி சாலை போன்றவற்றை எதிர்த்ததும் இதே கும்பல்கள்தான் என அவர் தெரிவித்தார். இதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதே கருத்தை அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர் நாராயணசாமியும் பலமுறை பகிரங்கமாக தெரிவித்துள்ளனர். என்.ஜி.ஓ. என்ற பெயரில் இதற்கு வெளிநாட்டு நிதி உதவிகள் வந்ததும் உண்மைதானே. இந்த தேசவிரோத போராட்டங்களை இந்து முன்னணி எதிர்த்ததை நான் நினைவூட்டுகிறேன்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டதால் காப்பர் விலை அதிகரித்துவிட்டது. நாட்டின் தேவையை பூர்த்தி செய்ய சீனாவில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

இந்த தொழிற்சாலையால் வேலைவாய்ப்பு பெற்று வந்த பல தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற அர்த்தமற்ற போராட்டங்களால்தான் தென் தமிழகத்தில் தொழில் தொடங்க பெரிய நிறுவனங்கள் தயங்குகின்றன.

திமுக எதிர்க்கட்சியாக இருந்த போது நடந்த போராட்டங்கள் மாநில வளர்ச்சிக்கு எதிராகவே இருந்துள்ளன. அதனாலேயே முதலீட்டை ஈர்க்க தமிழக முதல்வர் துபாய் சென்று ஓராண்டு ஆகியும் எந்த முன்னேற்றமும் இல்லை. எனவே, தேச விரோதமாகவும், நாட்டின் வளர்ச்சிக்கு எதிராகவும் செயல்படும் கும்பல்களின் கொட்டத்தை தமிழக அரசு ஒடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளரும், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

கறுப்பு கொடி ஏற்றி காங்கிரஸ் எதிர்ப்பு

●உதகை
நீலகிரி மாவட்டத்துக்கு வந்த பிரதமர் மோடிக்கு எதிர்ப்பு தெரிவித்து, காங்கிரஸ் கட்சியினர் நேற்று கறுப்பு கொடி ஏற்றினர்.

உதகை நகரத் தலைவர் நித்ய சத்யா தலைமையில் நடைபெற்ற போராட்டத்துக்கு, மாவட்ட துணைத் தலைவர் கெம்பையா முன்னிலை வகித்தார்.

மாவட்ட பொதுச் செயலாளர் உதகை ரவிகுமார், நகர துணைத் தலைவி பிரேமா, மாவட்ட செயலாளர் எஸ்.எம்.ரபீக் மற்றும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கருப்பு உடை, பேட்ஜ் அணிந்து, கம்பங்களில் கறுப்பு கொடி ஏற்றி எதிர்ப்பை தெரிவித்தனர்.

திருப்பூரில் மத நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி

●திருப்பூர்
முஸ்லிம்கள் ரமலான் நோன்பு கடைபிடித்து வருகின்றனர். மத நல்லிணக்கத்தை கடை பிடிக்கும் வகையில் திருப்பூர் பெரிய தோட்டம் பகுதியில் அனைத்து சமுதாய மக்களும் பங்கேற்ற இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதில், திருப்பூர் தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் க.செல்வராஜ், மேயர் தினேஷ் குமார் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I Fatima (Given Name) Huzaifa Mohsin Khasamwala (Surname) W/O, Huzaifa Mohsin Khasamwala R/o 13, Burhani Colony, Peelamedu, Coimbatore, Tamil Nadu - 641004 have changed my name to Fatima (Given Name) Huzaifa Khasamwala (Surname) for all purposes

பொது

விற்பனை

கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்-ன் EoI சமர்ப்பிபதற்கான கடைசி தேதி நீட்டிப்பு

10.02.2023 அன்று வெளியிடப்பட்ட படிவம் G க்கு சேர்க்கை மற்றும் 24.02.2023 மற்றும் 13.03.2023 அன்று பிற்சேர்க்கை வெளியிடப்பட்டது

இது படிவம் G விருப்ப வெளிப்பாடு அழைப்பு ("EOI") குறித்தது, பிசினஸ் ஸ்டாண்டர்டு மற்றும் எக்னாமிக் டைம்ஸ் அகில இந்திய பதிப்புகளில் மற்றும் இந்துவின் தமிழ் பதிப்புகளில் ("பிரதான விளம்பரங்கள்") பிப்ரவரி 10, 2023 அன்று வெளியிடப்பட்ட "கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தின் கார்ப்பரேட் இன்சால்வென்சி ரெசல்யூஷன் செயல்முறை தொடர்பான தீர்மானத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு ("EOI") விளம்பரத்தைப் பற்றியது மற்றும் திவால் மற்றும் திவால்நிலை (கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான திவால்நிலைத் தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் 36A(1) விதிமுறைகளின்படி EoI-களை சமர்ப்பிக்க கடைசி தேதி பிப்ரவரி 25, 2023 என்று இருந்தது, மற்றும் இது சம்பந்தமாக EoI-களை சமர்ப்பிக்கும் கடைசி தேதி மார்ச் 12, 2023 மற்றும் மார்ச் 27, 2023 என்று பிப்ரவரி 24, 2023 மற்றும் மார்ச் 13, 2023 அன்று இதே செய்தி தாள்களில் இரண்டு நீட்டிப்பு அறிவிக்கப்பட்டது.

EoI-களை சமர்ப்பிதற்கான தேதி மேலும் **ஏப்ரல் 17, 2023** வரை நீட்டிக்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளவும். மற்ற எல்லா விதிமுறை, நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் இல்லை.

EoI மற்றும் மற்ற ஆவணங்களுக்கான அழைப்பதழின் புதுப்பிக்கப்பட்ட ஆவணத்திற்கு தயவு செய்து http://www.coastalenergen.com/cirp.html பார்க்கவும் அல்லது எங்களுக்கு cirp.coastal@gmail.com எழுதவும்.

Sd/-
திரு. ராதாகிருஷ்ணன் தர்மராஜன்
தீர்மான வல்லுநர்
IBBI/IPA-001/IP-P00508/2017-18/10909
எண்.31, கிருஷ்ணா 1வது அவென்யூ
100 அடி சாலை, அசோக் நகர், சென்னை - 600083, தமிழ்நாடு
M/s. கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்-க்காக
AFA செல்லுபடி காலம் : நவம்பர் 30, 2023
நாள் : ஏப்ரல் 6, 2023
இடம் : சென்னை

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by M. Jegadesh Kumar at Survey Nos. 391/1 Part & 391/2, Kamaraj Road, Uppilipalayam Village, Coimbatore-641015 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).